முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.09.2023**, வியாழக்கிழமை

1. வானவர் மெச்சும் தருமனே
வள்ளலே வாழும் அரங்கனே
தானதருமமே நோக்கமாகக் கொண்டு
தருமசாலை அமைத்தருளும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது யாளிதிங்கள்
அய்நான்கோர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 21 ம் நாள், 07.09.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் பேயாழ்வார் யானும்
வையகம் வளமுற உரைப்பேன்
சோரமில்லா ஞான உலகம் அமைய
சுத்தநெறி காட்டும் அரங்கன்
4. அரங்கன் திருவடி பற்றி
ஆன்மீக உண்மை வழிகளை
வரங்களாக ஏற்றுத் தொடர
வணங்கி தருமநெறிக்கு வர
5. வருவதுடன் ஜீவத் தயவு காட்டும்
வகைதனை அன்னதான சேவையாக
குருவருள் ஆசியோடு செய்துவர
கூறிடுவேன் தொடரும் மக்களுக்கு
6. மக்களுக்கு ஞான ஆனந்தம்பட
மரணம் வெல்லும் பலமும்
ஆக்கமுடன் சர்வ பலமும் கூடி
அகிலம் மாற்றும் சக்தி பெறுவர்

7. சக்திமிகு ஞானிகள் பூசையை
சகலரும் செய்திடும் வண்ணம்
பக்திபட உலகோர் பின்பற்ற
பாதுகாப்பாய் வழிமுறை செய்ய
8. செய்யவே உலகம் எங்கிலும்
சித்தர் பூசை ஆற்றலாகப் பரவ
மெய்ஞானம் சர்வ சூட்சுமம் விளங்கி
மேலவர்கள் துணை தொடர்பும் காண்பர்
9. காண்கவே ஞானவான்கள் படை
கலிதனில் எங்கும் பெருகிட
ஆன்மீக ஞானபூமியாக உலகம்
அரங்கன் ஆசிபட மாறி
10. மாறியே ஞானவான்கள் தலைமை
மக்களெல்லாம் விரும்பும் வண்ணம்
ஆறுமுகனார் வெளிப்படும் காலமாக
ஆளுமையும் ஞான வழிகளாக
11. ஆகவே தேற்றம் கண்டு
ஆன்மீக அரசியல் களமாக
யுகம் மாறி ஞான ஆட்சிதானும்
உலகமே கண்டடைய நேரும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–